# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2164/72 - 2020 මාර්තු මස 01 වැනි ඉරිදා - 2020.03.01

*2164/72 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

மதுவரி அறிவித்தல் இல. 01/ 2020

**பூல் புரூப் ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமைத்துவ முறைமை**

திருத்தப்பட்டவாறான, மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 08 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 32 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதிய, 2147/75 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டவாறு 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதிய 2128/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 04/2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்ட விதிமுறைகள் பின்வருமாறு திருத்தப்படுவதாக பிரகடனப்படுத்துகின்றேன்.

1. 3 ஆம் விதிமுறை,

(அ) முதலாவது உப வாசகம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உப வாசகம் பதிலீடு செய்யப்படுவதன் ஊடாக :

"அவ்வாறே,

(i) இறக்குமதியாளர் ஒருவர், 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர், மற்றும்

(ii) உரிமம்பெற்ற உற்பத்தியாளர் ஒருவர், 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர்,

ஏற்கனவே உள்ள II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள, மதுவரிக்கு ஏற்புடைமையாகும் பண்டங்களின் தொகுதி மீது ஒட்டுத்துண்டு ஒன்றினை ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்." மற்றும்


1A - PG 4752 — 592 (2020/03)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) இரண்டாவது உப வாசகம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உப வாசகம் பதிலீடு செய்யப்படுவதன் ஊடாக :

"அவ்வாறே மேலும்,

(i) இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானங்கள் தொடர்பில் ஆயின், 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர், மற்றும்

(ii) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் தொடர்பில் ஆயின், 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர்,

II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள, மதுவரிக்கு ஏற்புடைமையாகும் இருப்புக்களைக் கொண்டுள்ள வர்த்தகர் ஒருவரால் குறித்த மதுவரிக்கு ஏற்புடைமையாகும் பண்டங்கள் மீது ஒட்டுத் துண்டினை ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.".

2. 13 ஆம் விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள "இருநூற்று ஐம்பத்தைந்து நாட்கள் (255) எனும் பதம் மற்றும் இலக்கத்திற்குப் பதிலாக "முந்நூற்று நாற்பத்தேழு நாட்கள் (347)" எனும் பதமும் இலக்கமும் பதிலீடு செய்யப்படுவதன் ஊடாக.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, மார்ச்சு 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.